**12** பாடம்

# நீர் யார் பக்கம்?

***ஒரு முக்கியமான நிகழ்வில் நீ பங்கேற்க இருந்தால் உனக்கு எப்படியிருக்கும்? அதுவும் அந்த முக்கியமான நிகழ்ச்சியில் நீ பேச வேண்டியதைப் பிழையில்லாமல் பேச வேண்டியதிருக்க, நீ பேசவேண்டியதையே மறந்துவிட்டால் உனக்கு எத்தனை வேதனை யாயிருக்கும்? மோசேயை இழந்த யோசுவாவுக்கும் அப்படித்தானிருந்தது.***

மோசே தங்களை விட்டுச் சென்றபின் தேவன் தங்களை நடத்திவந்த வழிகளை யோசுவா எண்ணிப்பார்த்தார். யாவும் ஆச்சரியமாக இருந்தது.

பொங்கிப் பிரவாகித்து ஓடிய யோர்தான் ஆற்றை தேவன் இஸ்ரவேலருக்காகப்



பிரித்து, உலர்ந்த தரையிலே நடக்கச்செய்ததை யோசுவா மீண்டும் ஒருமுறை நினைவு படுத்திப் பார்த்தார். அப்போது அறுப்புக் காலமாயிருந்தது. எரிகோவின் சமனான வெளி களிலே இஸ்ரவேலர் பஸ்காவை ஆசரித்தார்கள். பஸ்காவின் மறுநாளாகிய அன்றைய தினம் அவர்கள் அத்தேசத்தின் தானியத்தால் புளிப்பில்லா அப்பம் செய் தார்கள். புளிப்பில்லாத அப்பங்களையும் சுட்ட கதிர் களையும் புசித்தார்கள். அதன் பின் மன்னா பொழியவில்லை. கானான் தேசத்துப் பலனை அந்த வருஷத்திலேயே அவர் கள் புசித்தார்கள்.

இப்போது யோசுவா எரிகோவின் சமனான வெளியி லிருந்து தன் கண்களை ஏறெ டுத்துப் பார்த்தார். அப்போது தனக்கு எதிராக ஒருவர் நிற் பதைக் கண்டார். உருவின பட்டயம் ஒன்று அவர் கையில் இருந்தது. யோசுவா கலங் காமல் அவரிடம் வந்தார். ''நீர் எங்களைச் சேர்ந்தவரோ அல் லது எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ?'' என்று கேட்டார்.

## மனன வசனம்

**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். யோவான் 14:1.**

அதற்கு அவர் ‘‘அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன்’’ என்றார். அதைக் கேட்டபோது யோசுவா, தரையிலே முகங்குப்புற விழுந்து அவரை நோக்கி, ‘‘என் ஆண்டவர் இந்த அடியேனிடம் என்ன சொல்லச் சித்தமாயிருக்கிறீர்?’’ என்று கேட்டார்.

வந்தது யாரோ ஒரு போர் வீரன் அல்லன்; அங்கே நின்றது ஒரு பரலோக தூதனும் அல்லன். ஆனால்,தேவாதி தேவன் இயேசுதாமே அங்கே வந்து நின்றார். பொதுவாக தூதனைப்பற்றிக் குறிப்படும்போது தூதன் வந்தான், தூதன் பேசினான் என்றுதான் வேதத்தில் எழுதப்பட்டிருக்கும்; கர்த்தருடைய தூதனானவர் என்று வேதம் குறிப்பிடுவது இயேசுவைத்தான். எனவே இயேசுவைப்பற்றிக் குறிப்பிடும்போது, வந்தார், பேசினார் என்றே குறிப்பிடப்பட்டிருக்கும்.

அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று யோசுவா பயபக்தியோடு அவரைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்பொழுது கர்த்தருடைய சேனையின் அதிபதி, யோசுவாவைப் பார்த்தார். ‘‘நீ உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி’’ என்றார். உடனே யோசுவா தனது பாதரட்சைகளைக் கழற்றிப்போட்டார். தேவனை மனதாரப் பணிந்துகொண்டார்.

அப்பப்பா! யோசுவா நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார். நடக்க இருந்த யுத்தத்தில் என்னென்னவோ திட்டங்கள் தீட்டியிருந்தார். தான்தான் பெரிய



## செய்தி

**நம் அன்பான தேவனை நாம் தினமும் ஆராதிக்கலாம்.**

படைத்தலைவன்; தன் தலைமையில்தான் யுத்தம் நடைபெறும் என்ற எண்ணம் மனதில் சற்று கலக்கத்தைக் கூட ஏற்படுத்தியிருந்தது.


இப்போது புரிந்து கொண்டார். நானல்ல; தேவனே சேனைகளின் தலைவராக நின்று யுத்தத்தை ஜெயமாக நடத்துவார். யுத்தம் என்னுடையதல்ல; யுத்தம் கர்த்தருடையது என்று.

இஸ்ரவேலரை வழிநடத்தும் அந்தப் பெரிய பொறுப்பை யோசுவாமட்டும் தன் தலையில் வைத்துச் சுமந்து கொண்டிருக்கவில்லை. தேவனே அவர்களது யுத்தத் தள கர்த்தராக இருந்தார். யோசுவாவுடன் தேவன் இருந்தார்; தேவனும் யோசு வாவுடன் இருந்தார்.

என் குட்டிப் பிள்ளையே ! நீ தேவனுடன் இருப்பாயா?

### செய்முறை:

*யோசுவாவின் பாதரட்சைகளைக் கழற்றச் சொல்லியது யார்? பதில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள இரண்டாவது எழுத்தை அடித்துவிட்டு, பதிலைக் கோட்டில் எழுது.*



***கஓர்தே்பதரருகதைடலய***



***மேசநனைஅிஆயிஉன்***

***அபுதிமுபகுதி***

________________________________________